| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| முனைவர் பூ.ஆ.நரேஷ்,<br>இணை இயக்குநர் (பணியாளர்),<br>அரசுத் தேர்வுகள் இயக்ககம்,<br>சென்னை – 600 006. | முதன்மைக் கல்வி அலுவலர்,<br>முதன்மைக் கல்வி அலுவலகம்,<br>சென்னை. |

**ந.க.எண். 002505 /பி3/2024** **நாள் : 21.02.2024**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம்– இடைநிலை பொதுத்தேர்வு மார்ச்/ஏப்ரல் 2024 – விடைக்குறிப்புகள் (Key Answers) தயாரிக்கும் பணி – பாடங்கள் ஒதுக்கீடு செய்தல் – மறு ஆய்விற்கு ஆசிரியர்களை அனுப்ப கோருதல் – சில அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை:** அரசாணை (நிலை) எண்.211 பள்ளிக்கல்வி (அ.தே)த் துறை நாள்.18.11.2023

*******

நடைபெறவுள்ள மார்ச்/ஏப்ரல் 2024 இடைநிலை பொதுத் தேர்வுகள் முடிந்த உடன் மதிப்பீட்டுப் பணி ஆரம்பிக்கப்பட உள்ளதால், ஒவ்வொரு பாடத்தேர்வும் முடிந்த உடன் அந்தந்த பாடங்களுக்குரிய விடைக்குறிப்புகள் தயாரிக்கப்பட வேண்டும்.

எனவே, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கு, அந்தந்தப் பாடத்தேர்வுகள் முடிந்த உடன், அன்றைய தினம் பிற்பகல் முதலே சம்பந்தப்பட்ட பாட ஆசிரியர்கள் குழு (Tamil medium & English medium) விடைக்குறிப்புகள் தயாரிக்கும் பணியினை முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவி அலுவலர் (இடைநிலை) முன்னிலையில் ஆரம்பித்து, அவற்றை பட்டியலில் குறிப்பிட்டுள்ள தேதியன்று காலை 09:30 மணிக்குள் மின்னஞ்சல் வழியாக இவ்வலுவலக dgeb3sec@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும், விடைக்குறிப்புகளை தயாரிக்கும் குழுவில் இருந்து அனுபவம் மற்றும் திறமை வாய்ந்த ஒருவரை பட்டியலில் குறிப்பிட்ட அதே நாளன்று காலை 10:00 மணிக்கு இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், தங்களது மாவட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பாடங்களுக்கான விடைக்குறிப்புகளை தயாரிக்கும் பணிக்கென நியமிக்கப்படும் ஆசிரியர்களின் பெயர், பள்ளி முகவரி மற்றும் அலைபேசி எண் ஆகிய விவரங்களை பாட வாரியாக பட்டியலாக தயாரித்து **28.02.2024** தேதிக்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும், ஆசிரியர் குழு தயாரிக்கும் விடைக்குறிப்பினை உடனுக்குடன் தட்டச்சு செய்வதற்கென நியமிக்கப்படும் கணினி ஆசிரியர்களின் மேற்குறிப்பிட்டவாறான முழு விவரங்களையும் அப்பட்டியலுடன் இணைத்து அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

| வ. எண் | தேர்வு நடைபெறும் நாள் | பாடத்தின் பெயர் | விடைக்குறிப்பு தயாரித்து அனுப்ப வேண்டிய நாள்/ மறுஆய்வு செய்யும் ஆசிரியர் இவ்வலுவலகம் வரவேண்டிய நாள் |
|---|---|---|---|
| 1. | 26.03.2024 (செவ்வாய்) | (சிறுபான்மை மொழிப்பாடம்– இந்தி, குஜராத்தி, சமஸ்கிருதம்) | 28.03.2024 (வியாழன்) |
| 2. | 01.04.2024 (திங்கள்) | கணிதம் (பயிற்று மொழி இந்தி, குஜராத்தி) | 03.04.2024 (புதன்) |
| 3. | 04.04.2024 (வியாழன்) | அறிவியல் (பயிற்று மொழி இந்தி, குஜராத்தி) | (05.04.2024) (வெள்ளி) |
| 4. | 06.04.2024 (சனி) | இந்தி, குஜராத்தி, சமஸ்கிருதம் (விருப்பமொழிப்பாடம்) | 08.04.2024 (திங்கள்) |
| 5. | 08.04.2024 (திங்கள்) | **சமூக அறிவியல் (தமிழ் வழி / ஆங்கில வழி)** மற்றும் (பயிற்று மொழி இந்தி, குஜராத்தி) | **08.04.2024 (திங்கள்)** |

**விடைக்குறிப்புகள் தயாரிக்கும்பொழுது பின்பற்ற வேண்டியவை**

- 2023–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு புதிய பாடத்தின் கீழ் வெளியிடப்பட்ட திருத்திய பதிப்பு பாட புத்தக்கங்களை கொண்டு தமிழ் வழி/ஆங்கில வழி விடைக்குறிப்புகள் தயார் செய்ய வேண்டும்.
- விடைக்குறிப்புகளை மறுஆய்வு செய்ய ஏதுவாக ஒவ்வொரு விடையின் அருகில் அவ்விடை இடம்பெற்று இருக்கும் பாடப்புத்தக்கத்தின் பக்க எண் **(REFERENCE PAGE NUMBER)** குறிப்பிட்டு தமிழ் வழி/ஆங்கில வழி விடைக்குறிப்புகளை தயார் செய்ய வேண்டும்.
- ஒவ்வொரு பாடத்திற்கான விடைக்குறிப்பிலும், தேவைப்படும் இடங்களில் விடைக்கான மதிப்பெண்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்க வேண்டும். வினாவில் வரையறுக்கப்படாத நிலையில் (ஏதேனும் இரண்டு அல்லது மூன்று அல்லது நான்கு என வரையறுக்கப்படாத வினாக்களுக்கு) விடைக்குறிப்பிலும் மதிப்பெண்களுக்கு வரையறை செய்ய கூடாது எனவும், ஒவ்வொரு விடைக்கும் இடையே போதிய இடைவெளி விட்டு, விடைகள் தெளிவாக இருக்குமாறு விடைக்குறிப்புகள் தயாரிக்கப்பட வேண்டும் எனவும், அப்பணியில் ஈடுபடும் ஆசிரியர் குழுவிற்கு அறிவுறுத்த வேண்டும்.
- தமிழ் வழிக்கான விடைக்குறிப்புகளை **Vanavil Avvaiyar Font** –ல் மட்டுமே தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும்.
- ஆங்கில வழிக்கான விடைக்குறிப்புகளை **Arial Font**–ல் மட்டுமே தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும்.

..3..

- விடைக்குறிப்புகளை தட்டச்சு செய்ய வேண்டிய **Font Size 13** – ஆக இருக்க வேண்டும்.
- எக்காரணம் கொண்டும் விடைக்குறிப்புகளை **PDF format**-ல் அனுப்பக்கூடாது.
- எக்காரணம் கொண்டும் விடைக்குறிப்புகளை மின்னஞ்சல் வழி அனுப்புவதில் காலதாமதம் செய்யக் கூடாது.
- மந்தணத் தன்மை காப்பாற்றப்பட வேண்டும். ஊடகங்களுக்கு அவசியம் தெரிவிக்கக் கூடாது.

பார்வையில் காணும் **அரசாணையின்படி பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு மார்ச்/ஏப்ரல் 2024 முதல் மாணவர்களுக்கு விடைத்தாள் வழங்குதல் மற்றும் மறுமதிப்பீடு நடைமுறைபடுத்தப்பட உள்ளதால் , இதனை கருத்தில் கொண்டு விடைக்குறிப்பில் எவ்வித புகார் மற்றும் புதிய கோரிக்கைகள் எழா வண்ணம் பொறுப்புணர்வுடன் விடைக்குறிப்புகளை தயார் செய்ய** பாட வல்லுநர் குழுவினருக்கு சம்மந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர் உரிய அறிவுரை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

விடைக்குறிப்புகள் தயாரிக்கும் பணி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பணி என்பதால், **இப்பணியில் முதன்மைக் கல்வி அலுவலர்கள் தனிகவனம் செலுத்தி குறித்த காலத்தில் விடைக்குறிப்புகளை தயாரித்து இவ்வலுவலகத்திற்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பி வைக்க வேண்டும்** எனவும், விடைக்குறிப்புகள் தயாரிக்கும் பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கான பயணப்படி, தினப்படி மற்றும் உழைப்பூதியம் ஆகியவற்றை மதிப்பீட்டு முகாம்கள் வழியாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**ஒம்/–**
**இணை இயக்குநர் (பணியாளர்)**